Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Feminist Thoughts Evinced in *Manimegalai*

**Dr. I. J. Helena Gracelin,** Assistant Professor, Department. of Tamil, St. John's College, Palayamkottai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0003-2401-997X**
**DOI: 10.5281/zenodo.14752987**

## Abstract

*The primary purpose of the epic "Manimegalai" is to relieve hunger. Manimegalai is a role model showed the way to cure hunger. Manimegalai, the daughter of Madhavi, is portrayed in the epic as a one who has the attitude of helping people as much as she can to reduce poverty. The character Manimegalai lived like a lighthouse guiding the people who were wandering in poverty. Even though she was born in the Devadasi community, she came out of the profession and became a Buddhist monk spreading the principles of Budda. She takes the concept of feeding the starved as the goal of her life. She gives food to the hungry and wipes away the misery of hunger. Manimegalai became Annapoorani because she had done the job of eradicating poverty perfectly and the record of virtue shows Manimegalai as a woman of noble thought. Among the two great Tamil epics out of five, Manimegalai is a Buddhist epic. Her attitude toward charity presents the basic moral principle that has been insisted on by all religions. Hence, this study examines the principles of chastity, charity and giving food to the needy to emphasize morality.*

**Keywords:** Hunger, Chastity, Amutha Surabi, Chaste Woman, *Manimegalai*.

## References

[1] Balasundaram, T.S. *Pathinen Keelkanaku Moolam Uraiyum*. Saiva Sithantha Kalagam, Alwarpettai, Chennai.
[2] Balasubramanian, K.V. *Purananooru.* New Century Book House Pvt. Ltd., 2004.
[3] Pulavar Kulanthai. *Neethi Kalanchiam*. Saradha Publication, Chennai - 600014.
[4] Manickam, A. *Thirukural.* Manivasakar Publication, Paris Corner, Chennai – 600108.
[5] Venkadasamy Nattar, N. M. *Manimegalai Moolamum Uraiyum*. Saratha Publication, Rayapettai, Chennai – 600014.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

# *மணிமேகலை* காட்டும் பெண்ணிய சிந்தனைகள்

**முனைவர் ஐ. ஜெ. ஹெலினா கிரேஸ்லின்**, உதவிப் பேராசிரியை, தமிழ்த்துறை,
தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0003-2401-997X**
**DOI: 10.5281/zenodo.14752987**

**ஆய்வுச் சுருக்கம்**

*"மணிமேகலை" என்ற பௌத்த சமய காப்பியத்தின் முதன்மை நோக்கம் பசி ஒழிப்பே ஆகும். பசி ஒழிப்புக்குரிய அமுத சுரபியை மணிமேகலைக்கு காட்டியது மணிமேகலா என்ற பெண் தெய்வம் ஆகும். கடலில் தத்தளிப்போருக்குத் திசை காட்டும் கலங்கரை விளக்கம் போல பசியில் துன்புறுவோருக்கு உணவு கொடுத்து பசி என்னும் துயரை போக்கி காப்பியத்தில் ஒளியாக மின்னுகின்றாள். அன்னத்தை அமுத சுரபியில் பூரணமாய் பெற்றிருந்தவள் என்பதல் மணிமேகலை அன்னபூரணியானாள். மணிமேகலை காட்டும் அறம் குறித்த பதிவு இவ்வாய்வில் எடுத்துரைக்கப்படுகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** பசி, கற்பு, அமுதர சுரபி, பத்தினிப்பெண், *மணிமேகலை.*

**முன்னுரை**

இரட்டை காப்பியங்களில் மணிமேகலை பௌத்த சமய காப்பியமாக இருந்தாலும் அனைத்து சமயத்தாருக்கும் பொருந்தும் வகையில் அறக்கோட்பாடுகளை முன் வைக்கிறது மாதவியின் மகளான மணிமேகலை தன்னால் இயன்ற வரை மக்களுக்கு உதவும் மனப்பான்மை உடையவளாக காப்பியத்தில் படைக்கப்படுகின்றாள். பசிபோக்குதல், கற்புநெறி, புலால் மறுத்தல், கள்ளுண்ணாமை என்ற கொள்கைகளை முன்னிறுத்தி அறத்தை வலியுறுத்தும் வகையில் இவ்வாய்வு ஆராயப்படுகின்றது.

**அறம் – விளக்கம்**

'அறு' என்ற வினைச்சொல் அடியாக பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல், வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பல்வகைப் பொருள்களை வழங்கி வருகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே அறம். அது மட்டுமன்றி பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்கிறது ஆன்மீகம். தமிழ் இலக்கியங்கள் 20 நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழமை வாய்ந்தவையாகும். இலக்கியங்கள் எழுந்த காலத்தில் காணப்பட்ட சமூக பிரச்சனைகள் மக்களின் வாழ்க்கை நெறிகள், பழக்க வழக்கங்கள், பண்பாடு இல்வாழ்க்கை நெறிமுறைகள் போன்ற வாழ்வியல் சிந்தனைகளை

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

ஊட்டும் அறிவு பெட்டகம் அற இலக்கியங்கள் ஆகும். **"அறத்தால் வருவது இன்பம்" (39)**என்கிறார் வள்ளுவர். மனித வாழ்வை மேன்மையுற செய்வது அறம். இதனையே.

**அறத்தால் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல. (குறள், 39)**

என்ற குறளின் மூலம் அறம் இன்பம் புகழை தரும் என்கின்றார்.

**பசி தீர்க்கும் அறம்**

உலகத்தில் கொடிய நோய் 'பசிநோய்' என்கிறது. மணிமேகலை, அமுதசுரபி, பசியின் கொடுமையை உணர்த்துவதற்காகவே படைக்கப்பட்டது. அறங்களில் சிறந்த அறம் எதுவென்றால்,

**அறமெனப் படுவ தியாதெனக் கேட்பின்**
**மறவாதிது கேள் மண்ணுயிர்க்கெல்லாம்**
**உண்டிமுடையு முறையுளுமல்லலது**
**கண்டதில்லை (மணிமேகலை, 25: 228-231)**

உணவும், உடையும், உறையுளும் இல்லாதவர்களுக்கு அளிப்பதே அறங்களில் சிறந்தது. இம்மூன்றினுள் பசிப்பிணிபோக்கல் மிகச் சிறப்பு வாய்ந்தது. பசியில் ஒருவன் இறந்துபடும் நிலையில் அவனுக்கு உணவு கொடுப்பவன் உயிர் கொடுக்கின்ற கடவுளுக்கு சமம் என்பதை,

**மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி**
**கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (மணிமேகலை, 11: 95-96)**

என்றும் வறியவர்களுக்கு உணவளிப்பதே சிறப்பு என மணிமேகலை சுட்டுகின்றது. அள்ள, அள்ள குறையாத 'அமுதசுரபி' என்ற பாத்திரம் மூலம் உணவு அளித்து மணிமேகலை மக்களின் பசிப்பிணியை அகற்றுகின்றாள்.

**கற்பின் சிறப்பு**

கற்புடன் இருக்கும் பெண்களுக்கு இயற்கையைக் கட்டுப்படுத்தும் திறன் உண்டென திருக்குறலும், மணிமேகலையும் விளக்குகின்றன. மணிமேகலையில் கற்பின் சிறப்பினை உணர்த்த பீலிவளை சாருகை, மடந்தை, விசாகை, ஆதிரை சாலினி, மணிமேகலை போன்ற கதாபாத்திரங்களில் படைக்கப்பட்டன. ஆதிரையின் கணவன் கணிகையிடம் அழிவுறுதலும், ஆதிரை கற்புடன் சிறந்து விளங்குவதால் தீயும் அவளைத் தீண்டாததும் கற்பின் சிறப்பாகும்.

**திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்**
**தீவினை கொல்லாத் தீவினை யாட்டியேன் (மணிமேகலை, 16: 34-35)**

என்பதில் ஆதிரையின் கற்பின் மாட்சியும் தெளிவாகிறது.

மணிமேகலையில் பத்தினிப் பெண்களை மூவகைப்படுத்திக் கூறுகின்றது. கணவன் இறந்தவுடன் எரிமூழ்கி இறப்பவர், தனியே எரி வளர்த்து இறப்பவர், கணவனை நினைந்து

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

கைமை நோன்பேற்பவர் என்று விளக்குகின்றது. பெண்களின் கற்பு தவசிகளின் நோன்பு ஆகியவற்றை அரசன் பாதுகாக்கா விட்டால் இடர்பட நேரிடும் என்று மணிமேகலை இயம்புகிறது. மணி பல்லவத் தீவிற்கு மணிமேகலையை எடுத்துச் சென்றது. அமுதசுரபி பெறவும் பழம் பிறப்பு அறியவும், மணிமேகலையை பல்வேறு துன்பங்களிலிருந்து காப்பாற்றியது மணிமேகலா தெய்வம் என்கின்ற பெண் பாத்திரப்படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. மணிமேகலையை ஒரு அறச்செல்வியாக உயர்த்திய பெருமை சீத்தலைச் சாத்தனாயே சாரும் என்றே கூறலாம்.

**புலால் மறுத்தல்**

**தன்னூண் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்**
**எங்ஙனம் ஆளும் அருள் (குறள், 251)**

மனிதன் பிற உயிரினங்களைத் தன்னூன் பெருக்கத்திற்கு உண்ணுவது அறம் ஆகாது என வள்ளுவர் உரைக்கிறார். ஆனால் மணிமேகலையில் மனிதனைக் கொன்று மனிதன் உண்ணும் வழக்கம் இருந்தது.

**நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்**
**பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பின்னிவன்**
**தானே தமியள் வந்தனன் அளியள்**
**உளனுடை இவ்வுடம் புண்வென்றெழுப்பலும் (மணிமேகலை, 16: 56-59)**

சாதுவன் அவர்களின் மொழி தெரிந்ததினால் அறவழியில் செல்லுமாறு அறிவுறுத்துகிறான்.

**கள்ளுண்ணாமை**

சங்க காலத்தில் போற்றப்பட்ட கள்ளுண்ணும் வழக்கம் சங்கம் மருவிய காலத்தில் ஒழுக்கத்திற்கு எதிரானதாகக் கருதப்பட்டது. திருவள்ளுவர் கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்தைப் படைத்து கள்ளுண்ணுதலைக் கடிந்துள்ளார். மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதையில் சாதுவன் நாகர்களிடம் சிக்கி நாகர் குருமகனிடம் அவனை அழைத்துச் செல்லப்பட்டபோது அக்குரு மகன்கள் மயக்கத்தில் இருப்பதைக் கண்டு,

**மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய் (மணிமேகலை, 16: 84-85)**

மனதை மயக்கும் கள்ளும் மனித உயிர்களைக் கொல்லுதலும் சான்றோர்கள் கடிந்த செயலாகும் என சாதுவன் நாகர் குருமகனுக்கு அறிவுரை கூறுகிறான்.

**பிறருக்கு உதவும் அறப்பண்பு**

தன்னிடம் இல்லை என்று கேட்பவர்க்கு இருப்பதை கொடுத்து உதவுவது ஈகை குணம். ஒருவன் தான் தேடிப் பெற்ற செல்வத்தை தான் மட்டும் பயனை அடைந்து இன்புற்று வாழ்தல் கூடாது பிறருக்கும் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பதை,

**முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதல்**

**பிற்பெரிய செல்வம் பெறலாமோ (பழமொழி நானூறு, 233. 1-2)**

என்ற வரிகளில் இருப்பவரின் உள்ளத்தின் மனநிலை அறிந்து கொடுப்பதே சிறந்த ஈகையாகும். காப்பிய காலத்தில் மணிமேகலை என்ற பாத்திர படைப்பு ஏனைய கதாமாந்தரை விட ஈகைப் பண்பில் தன்னிரிகல்லாத தலைவியாய் உயர்ந்து நிற்கின்றாள்.

மனிதன் சுயநலவாதியாக இருக்காமல் பிறருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட உதவிகளைச் செய்யும்போது நம்மை விட சிறியவர்களுக்குச் செய்ய வேண்டும். **"ஆற்றுநர்களிப்போர் அறவிலை பகர்வோர்" (மணிமேகலை, 11:92)** என்று மணிமேகலை உணர்த்துகின்றது. "**வறியவர்களுக்கு ஒன்று ஈவதே ஈகை" (குறள், 221)** என்னும் வள்ளுவரின் கருத்தோடு ஒத்து நோக்கப்படுகின்றது.

நல்ல செயல்களைச் செய்வொர் சொர்க்கத்திலும், தீயச் செயல்களைச் செய்வோர் நரகத்திலும் போவார் என்பதை உணர்ந்த சான்றோர் தீயதை விட்டு நல்லறம் நாடினர்.

**இதனையே சாத்தனார் மணிமேகலையில்**

**நல்லறம் செய்வோர் நல்லுலகடைதலும்**

**அல்லறஞ் செய்வோர் அருநரகடைதலும்**

**உண்டென உணர்ந்தலின் உரவேள் களைந்தனர் (மணிமேகலை, 16: 88-90)**

என்ற பாடல் விளக்குகின்றது. இதனால் பிறவிப்பயன் பற்றி நன்கு தெளிவு பெற்றிருந்தனர் எனலாம்.

**நல்லது செய்த லாற்றீராயினும்**

**அல்லது செய்த லோம்புமி னதுதான்**

**எல்லாரு முவப்ப தன்றியும்**

**நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே (புறம், 195:6-9)**

என்ற புறநானூற்றுப் பாடலிலும் நரிவெரூத்தலையார் நல்ல செயல்களை வாழ்வில் செய்தால் மட்டுமே வாழ்வு வளமாகும் என்கின்ற கருத்தை முன் வைக்கின்றார்.

மணிமேகலையில் வரும் மணிமேகலை என்ற பெண் பாத்திரம் அறம் செய்தலையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுனர் முக்தி அடைந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இன்றைய காலகட்டத்தில் உற்றுநோக்கும்கால் புகழ், பணம் இதற்காகவே அறம் செய்யும் சமூக அவலத்தை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

**மணிமேகலையில் பெண்ணிய சிந்தனைகள்**

மணிமேகலை ஒரு தன்னிச்சையான பெண்ணாக வரையறுக்கப்பட்டுள்ளார். ஆண்கள் வழிநடத்தும் சமுதாயத்திலிருந்து விலகி தன் வாழ்வின் பாதையை தானே தேர்வு செய்கிறாள். அவள் தன்னுடைய வாழ்க்கையை பக்தியுடனும், அறத்துடனும், தத்துவ சிந்தனைகளுடன் அமைத்துக் கொள்கிறாள். மணிமேகலையின் வாழ்வு பெண்ணின் சுய நிர்ணயத்தை முன் வைக்கிறது. காதல், துறவியம், தன்னலமற்ற சேவை ஆகியவற்றின் மூலம் தனக்கென ஒரு

அடையாளத்தை உருவாக்குகிறாள். சமகால பெண்ணியக் கோணத்தில் மணிமேகலையின் கதை பெண்களின் சுதந்திரம் மற்றும் சமுதாயத்தில் அவர்களின் உரிமைகளை எடுத்துக் காட்டுகிறது. மணிமேகலை பௌத்த தத்துவங்களின் மீது உறுதியுடன் இருப்பதால் பெண்களின் அறிவாற்றல் மற்றும் தத்துவ சிந்தனைமிக்க மனோபாவத்தை காட்டுகின்றார்.

மொத்தத்தில் மணிமேகலை காப்பியம் பெண்ணியக் கோணத்தில் பெண்ணின் சுயநிர்ணயம், சுதந்திரம் அறம், துறவியத்தில் அவர்களுடைய பங்கு ஆகியவற்றை வலுப்படுத்தும் ஓர் இலக்கிய ஆக்கமாகும்.

**முடிவுரை**

கணிகை குலத்தில் பிறந்தாலும் கற்புக்கு இலக்கணமான மணிமேகலை பிற உயிர்கள் மீது இரக்கம் கொண்டு அறம் செய்து காப்பிய மாந்தர்களின் தலைமைப் பண்பை அடைகின்றாள். பசிப்பிணியைப் போக்கும் நோக்குடன் செய்யப்படும் அறமே நல்லறமாகும். எதார்த்தம், புனைவு வழியாகப் பல நல்ல கருத்துக்களை உள்ளடக்கிய மணிமேகலை பாத்திரப்படைப்பினை இன்றைய இளைய சமுதாயத்தினர் உணர்ந்து அறவழியைப் பின்பற்ற வழி நடத்துவோம்.

**குறிப்புகள்**

[1] பாலசுந்தரம், தி. சு. *பதினெண் கீழ்க்கணக்கு மூலம் உரையும்.* சைவ சித்தாந்த கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை.

[2] பாலசுப்பிரமணியன், கு. வெ. *புறநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 2004.

[3] புலவர் குழந்தை. *நீதிக் களஞ்சியம்.* சாரதா பதிப்பகம், சென்னை – 600014.

[4] மாணிக்கம், ஆ. *திருக்குறள்.* மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை - 600108.

[5] வேங்கடசாமி நாட்டார், நா. மு. *மணிமேகலை மூலமும் உரையும்.* சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 600014.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.